Probate OP.No.71/2021. – 06.07.2023

PW2 – லட்சுமணன்
எதிரிமனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரரை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 10 வருடமாக தெரியும். மனுதாரரின் கணவர் ஜெயக்குமார் எனக்கு குடும்ப நண்பர். ஜெயக்குமார் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இதனால் அவர் முத்திரை தாள்கள் வாங்கி வைத்திருப்பார் என்பது எனக்கு தெரியும் என்றால் அவர் அவ்வாறு முத்திரைத்தாள்கள் வாங்கி வைப்பதில்லை. உயில்எழுதும்போது மனுதாரரின் கணவர் ஜெயக்குமாருக்கும் அவரது தாயாரான எதிர்மனுதாருக்கும் எந்த ஒரு குடும்ப பிரச்சனையும் இல்லை என்றால் சரி. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உயிலில் எந்த ஒரு சொத்து விவரமும் குறிப்பிடப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரி. உயில் எழுதுமபோது ஜெயக்குமார் உடல்நிலை குறைவில்லாமல் நன்றாக தான் இருந்தார் என்றால் சரியல்ல. உடல்நிலை சரியில்லாமல்தான் இருந்தார். எதிர்மனுதாரரின் மகனின் சொத்திலிருந்து எந்த ஒரு பங்கும் தாயாருக்கு கிடைக்ககூடாதென்ற கெட்ட எண்ணத்தில் போலி உயில் ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/– S.Sumathy,
Principal District Judge, Salem.